நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கோவை மக்களிடம் காணொலி பிரச்சாரம்

‘நீட்’ மட்டுமல்ல; தமிழகத்துக்கு எதிரான எந்த திட்டம் வந்தாலும் அனுமதிக்க மாட்டோம்

முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, பிப்.7– ‘நீட்’ மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கு விரோதமான எந்த திட்டம் வந்தாலும் அதனை அனுமதிக்க மாட்டோம் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

"விடியலில் வரும் சூரியனின் வெளிச்சம் போல, தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஒளி கொடுக்கும் நம் ஆட்சி உள்ளாட்சியிலும் தொடர வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கூறினார்.

நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க.வின் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் நேற்று (6–ந் தேதி) காணொலிவாயிலாக, கோவை மாவட்டத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசியதாவது:–

ஆட்சிக்கு வந்து இன்னமும் ஓராண்டு காலம் கூட நிறைவடைவதற்கு முன்னரே, கொடுத்த வாக்குறுதிகளில் முக்கால் பங்குக்கு மேல் நிறைவேற்றிக் கொடுத்த ஆட்சியைத் தலைசிறந்த ஆட்சி என்றுதானே சொல்ல முடியும்.

அத்தகைய தலைசிறந்த ஆட்சிக்கு இலக்கணமாக நமது தி.மு.க. ஆட்சி நடந்து வருகிறது. பெரும்பான்மை பலத்தால் சட்டமன்றத்தேர்தலில் வெற்றி பெற்றதைப் போல, உள்ளாட்சி அமைப்புகளிலும் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றால்தான் நாம் நிறைவேற்றும் திட்டங்களை மக்களுக்கு முழுமையாகக் கொண்டு போய்ச் சேர்க்க முடியும்.

அந்த எண்ணத்தோடுதான் ‘உள்ளாட்சியிலும் தொடரட்டும் நம்ம ஆட்சி’ என்ற முழக்கத்தை நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

8 மாதக் காலத்தில் இவ்வளவு திட்டங்களையும் நாங்கள் முன்னெடுத்துச் செய்துள்ளோம். எந்த அரசாவது இந்த அளவுக்கு வேகமாகச் செயல்பட்டிருக்கிறதா? கொரோனா – மழை வெள்ளம் என்று பல இடர்களைத் தாண்டி இவ்வளவு வேகமாகச் செயல்பட்டிருக்கிறோம்.

எங்களைப் பொறுத்தவரை நான் முதலில் இருந்து சொல்லி வருவது இதுதான் – இந்த ஸ்டாலினின் அரசு, உங்களின் அரசு – உங்கள் எல்லோருக்குமான அரசு. இது ஒரு கட்சியின் ஆட்சி அல்ல; இனத்தின் ஆட்சி.

ஒரு நல்லாட்சி தலைசிறந்த ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணம்தான் இந்த அரசு. பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் செய்து தருவோம்.

தேர்தல் முடிந்ததும் சாலைகள்

உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடன் சாலைகள் அமைக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். நீண்டநாட்களாகக் கட்டப்பட்டு வரும் மேம்பாலங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என உங்களுக்குத் தெரியும். அவை தேதி குறிப்பிட்டு முடிக்கப்படும் என்றும் உறுதியளிக்கிறேன்.

குடிநீர் இணைப்பு கேட்டு காத்திருப்போருக்கு வெளிப்படைத் தன்மையோடு இணைப்பு வழங்கப்படும். வீடுகட்ட அனுமதி பெற எளிமையான வழிமுறைகள் கையாளப்படும். சிறு குறு தொழில் முனைவோர்க்கு அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும். வார்டு வாரியாகக் குறைதீர்ப்பு முகாம் மாதம்தோறும் நடத்தப்படும்.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் வளரவேண்டும் அனைத்துத் துறைகளும் வளரவேண்டும் என்பதை மட்டுமே ஒரே நோக்கமாகக் கொண்டு செயல்படும் ஆட்சி நமது ஆட்சி.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஒன்றிய அரசிடமும் நம்முடைய தமிழ்நாட்டுக்கான உரிமைகளைப் போராடியும் வாதாடியும் பெறுகிற ஆட்சியாக தி.மு.க. ஆட்சி இருக்கும். தமிழ்நாட்டின் ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவைச் சிதைப்பதாக நீட் தேர்வு இருக்கிறது. அரியலூர் அனிதா தொடங்கி பத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியரை நாம் இழந்தோம். நீட் தேர்வு என்பது பல லட்சம் கொடுத்துப் பயிற்சி மையங்களில் படிக்க வசதி உள்ள மாணவர்களுக்குத்தான் வசதியானது. முதல் ஆண்டு இடம் கிடைக்கவில்லையா? அடுத்த ஆண்டும் லட்சக்கணக்கில் பணம் கட்டிப் பயிற்சி பெறுகிறார்கள். இது எல்லா மாணவ, மாணவியராலும் முடியுமா? ஏழைகளால் முடியுமா? முடியாது.

அரசுப் பள்ளியில் படிப்பவர்களால் முடியுமா? முடியாது.

நீட் எதிர்ப்பு

நீட் தேர்வில் இருந்து விலக்கு தர வலியுறுத்தும் மசோதாவை கவர்னர் திருப்பி அனுப்பினார் என்று தெரிந்ததும் மறுநாளே – அதாவது, நேற்று அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்தினோம். அடுத்ததாக, வரும் 8–ம் நாள் அதாவது நாளை (செவ்வாய்க்கிழமை) தமிழ்நாடு சட்டமன்றம் கூட இருக்கிறது. மீண்டும் அதே மசோதாவை இன்னும் வலிமையோடு நிறைவேற்றப் போகிறோம்.

அண்ணாதி.மு.க. ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரண்டு சட்ட மசோதாக்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு மதிக்கவே இல்லை; பல மாதம் கிடப்பில் போட்டது. காரணம் எதுவுமே சொல்லாமல் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

இந்தத் தகவல் தமிழ்நாடு அரசுக்குச் சொல்லப்பட்டும், சட்ட அமைச்சராக இருந்த சி.வி. சண்முகம் அதனை மூடி மறைத்துவிட்டார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான்தான் கேள்வி எழுப்பினேன்.

“ஒன்றிய அரசில் இருந்து ஏதாவது தகவல் வந்ததா?, நீங்கள் போய்க் கேட்டீர்களா?”

“இப்படியே எத்தனை நாட்கள் நாம் காத்திருப்பது?” என்று கேட்டேன்.

“எந்த தகவலும் வரவில்லை”என்று அன்று சட்ட அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் சட்டமன்றத்தில் சொன்னார்.

எல்லாவற்றுக்கும் முந்திக் கொண்டு பதில் சொல்லுபவரான முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் என்ன சொன்னார் என்றால், “கவர்னருக்கு நாம் அனுப்பத்தான் முடியும். அவரைப் போய் நாம் கேள்வி கேட்க முடியாது”என்று கையை விரித்தார்.

அடிமை சேவகம்

உண்மை என்னவென்றால், ஒன்றிய அரசு அதனைத் திருப்பி அனுப்பி விட்டது, அதை வெளியில சொல்ல வெட்கப்பட்டு மறைத்துவிட்டார்கள். இது சம்பந்தமான ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்தில் வந்தபோது, ஒன்றிய அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், 'நாங்கள் எப்போதோ திருப்பி அனுப்பிவிட்டோமே' என்று பதிவு செய்தார். அதன்பிறகுதான் உண்மை நமக்குத் தெரிந்தது. ‘நடுவீட்டில் திருடன் மாட்டிக்கொண்டதைப் போல’ அண்ணா தி.மு.க. மாட்டிக் கொண்டது.

அவர்களின் கொத்தடிமைத்தனம் காரணமாக – எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டு இருந்ததன் காரணமாக அடிமைச் சேவகம் காரணமாக அன்று நீட் மசோதாவை மீண்டும் நிறைவேற்ற மறுத்தார்கள்.

நூற்றாண்டுகளாக மறுக்கப்பட்ட கல்வி உரிமையை பல போராட்டங்களுக்குப் பிறகு மீட்டு, சில பத்தாண்டுகளாகத்தான் பலரும் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். படித்தால் தானாகத் தகுதி வந்து வாழ்க்கையில முன்னேறிவிடுவார்கள். ஆனால் படிப்பதற்கே உனக்குத் தகுதி வேண்டும் என்று தடுக்கும் பழைய சூழ்ச்சியின் புது வடிவம்தான் நீட்.

அரசியல் நடத்த அவசியம் இல்லை

அதனால்தான் நாம் தொடர்ந்து நீட் தேர்வை எதிர்க்கிறோம். மருத்துவப் படிப்புகளில் சேர்வதாலேயே யாரும் மருத்துவர் ஆகிவிட மாட்டார்கள். மருத்துவப் படிப்புகளில் தேர்ச்சி அடைந்தால்தான் டாக்டர் ஆவார்கள். அப்படித்தான் உலகின் தலைசிறந்த டாக்டர்களாக நமது தமிழ்நாட்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். நீட் தேர்வை மேலோட்டமாகப் பார்க்கக் கூடாது. அதன் முகமூடியைக் கழட்டிப் பார்க்க வேண்டும். வெறுமனே அரசியலுக்காக எதிர்க்கவில்லை. மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் கொட்டிக்கிடக்கின்றன. மக்களுக்கு எதிரான அவ்வளவு செயல்களை அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே நீட் தேர்வை வைத்துதான் அரசியல் நடத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

நீட் தேர்வு என்பதே 2016–ம் ஆண்டு பா.ஜ.க. அரசாங்கத்தால் திணிக்கப்பட்டதுதான். அந்தத் தேர்வுக்கு 2016–ம் ஆண்டு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவும் எதிர்ப்பு தெரிவித்தார். அதனால் 2016–17–ம் ஆண்டுக்கான தேர்வில் தமிழ்நாட்டுக்கு விலக்கு கிடைத்தது; நான் மறுக்கவில்லை. இதே எதிர்ப்பைத் தொடர்ந்து காட்டி இருந்தால் தேர்வை நடத்தாமல் விட்டிருப்பார்கள். ஆனால், அடிமை அண்ணா தி.மு.க. அரசாங்கம் 2017–18–ம் கல்வி ஆண்டில் நீட் தேர்வைத் தலையாட்டி ஏற்றுக் கொண்டதுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம்.

தமிழக விரோத திட்டங்களை எதிர்ப்போம்

இதோ இப்போது நாம் துணிச்சலோடு, கவர்னர் திருப்பி அனுப்பிய சட்டமசோதாவை மீண்டும் நிறைவேற்றி அவருக்கு அனுப்ப இருக்கிறோம். நீட் எதிர்ப்பில் பின்வாங்க மாட்டோம். நீட் மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கு விரோதமான திட்டம் எது வந்தாலும் அனுமதிக்க மாட்டோம்.

மக்களைப் பற்றியே நித்தமும் சிந்திக்கிற திமுக அரசாங்கம் மாநில ஆட்சியை நடத்தி வரும் இந்த மகத்தான நேரத்தில் உள்ளாட்சி அமைப்புகளிலும் நாம் முழுமையான வெற்றியைப் பெற்றால் கோட்டையில் இருந்து உருவாக்கும் அனைத்துத் திட்டங்களும் அனைத்து கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் செல்லும். அனைத்து வீதிகளுக்கும் வீடுகளுக்கும் போய்ச் சேரும்.

விடியலில் வரும் சூரியனின் வெளிச்சம் போல, தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஒளி கொடுக்கும் நம் ஆட்சி உள்ளாட்சியிலும் தொடர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஞான ராஜசேகரன் எழுதிய ‘‘இந்திய ஆட்சிப் பணியும், சினிமாவும் மற்றும் நானும்’’ என்ற புத்தகத்தை வெளியிட, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நடிகர் சிவகுமார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நூல் ஆசிரியர் ஞான ராஜசேகரன், வெளியீட்டாளர் வேடியப்பன், சகுந்தலா ராஜசேகரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

உலகின் புகழ் பெற்ற தலைவர்கள் பட்டியல்: மோடி மீண்டும் முதலிடம்

டெல்லி, பிப். 7–

உலகின் புகழ் பெற்ற தலைவர்கள் பட்டியலில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் போன்ற முக்கிய உலகத் தலைவர்களை பின்னுக்கு தள்ளி பிரதமர் மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனமான மார்னிங் கன்சல்ட் வெளியிட்ட உலகளாவிய தலைவர்களின் தரவரிசைப் பட்டியலில், அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் போன்ற உலகத் தலைவர்களை பின்னுக்குத் தள்ளி, இந்திய பிரதமர் மோடி அதிக மதிப்பீட்டைப் பெற்று முதல் இடத்தில் உள்ளார்.

முதல் 13 உலகத் தலைவர்களின் பட்டியலில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2வது இடத்தை பிடித்துள்ளார். அமெரிக்க அதிபர் ஜோ பிடன் 41 சதவீத மதிப்பீட்டில் ஆறாவது இடத்தில் உள்ளார். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் 41 சதவீதத்துடன் 8வது இடத்தை பிடித்துள்ளார்.

குளோபல் லீடர் அப்ரூவல் தரவரிசைப் பட்டியலின்படி, 13 உலகத் தலைவர்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்திலும், மெக்சிகோ அதிபர் ஒப்ரடோர் 64 சதவீதமும், இத்தாலி பிரதமர் மரியோ டிராகி 57 சதவீதமும், ஃபுமியோ கிஷிடா 47 சதவீதமும், ஜெர்மன் அதிபர் ஓலாப் 47 சதவீதமும் பெற்றுள்ளனர் உள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஜோ பிடன், தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் 41 சதவீத மதிப்பீடுகளைப் பெற்றுள்ளனர். ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் 37 சதவீதமும், பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் 35 சதவீதமும் பெற்றுள்ளனர். பிரதமர் மோடி முதலிடத்தை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக பிடித்துள்ளார்.

திருப்பூர் அருகே பெண் கொலை: உடலை சூட்கேஸில் மறைத்து சாக்கடையில் வீசிய கொடூரம்

திருப்பூர், பிப். 7–

திருப்பூர் அருகே கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலை சூட்கேஸில் மறைத்து வைத்து சாக்கடை கால்வாயில் வீசப்பட்ட பெண்ணின் சடலத்தை காவல்துறையினர் மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூரிலிருந்து தாராபுரம் செல்லும் சாலையில் உள்ள பொள்ளிகளி பலயம் பிரிவு அருகே சாக்கடை கால்வாயில் சூட்கேஸ் ஒன்று அநாதையாக கிடப்பதாக ஊரக காவல் துறையினருக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் சாக்கடையில் வீசப்பட்டிருந்த சூட்கேஸை மீட்டனர். சூட்கேஸை திறந்தபோது கழுத்தை அறுத்து கொலை செய்து வைக்கப்பட்டிருந்த 25 வயது உடைய பெண்ணின் சடலத்தை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இதனையடுத்து தடயவியல் நிபுணர்கள் மற்றும் கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் மற்றும் கைரேகை மாதிரிகள் சேகரிக்கப்பட்டது.

இதையடுத்து அந்த சடலத்தை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கொலை செய்யப்பட்ட பெண் யார், அவரை கொலை செய்து சாக்கடையில் வீசி சென்றது யார்? என்பது குறித்து வழக்கு பதிவு செய்த ஊரக போலீசார் பெண்ணின் புகைப்படத்தை கொண்டு காணாமல் போனவர்கள் விவரங்களுடன் ஒப்பிட்டு அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் வேறு பகுதியில் கொலை செய்துவிட்டு சடலத்தை மறைக்க சூட்கேசில் வைத்து செல்லும் வழியில் ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதி என வீசிச் சென்று இருக்கலாம் என்பதால் அந்த சாலையில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

ரவி குமார் டிஸ்டிரில்லரீஸ் லிமிடெட்
CIN: L51909PY1993PLC008493
பதிவு அலுவலகம்: C-9, C-10, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், 2வது பிரதான சாலை தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.

அறிவிப்பு

SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிகள் 2015 ன் விதி 29 மற்றும் 47ன்படி

31-12-2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் 9 மாதங்களுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெற்று பதிவுக்கு எடுத்துக்கொள்வதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 14-02-2022 திங்கள் கிழமையன்று நடைபெற உள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

28-12-2021 தேதியிட்ட எங்களது கடிதத்திற்கு இணங்க 2015 SEBI ன் திருத்தப்பட்ட மற்றும் தொடர்ச்சியாக விதிமுறைகளின்படி (உள்வர்த்தக தடை) 31-12-2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிவிப்புக்கு பிறகு 01-01-2022 முதல் 48 மணி நேரம் வரை நிறுவனத்தில் (நியமிக்கப்பட்ட நபர்களுக்கான) வர்த்தக சாளரம் மூடப்பட்டிருக்கும்.

மேலும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகவல்களை கம்பெனியின் இணையதளம்: www.ravikumardistilleries.com என்ற இணையதளத்திலும், NSE மற்றும் BSE இணையதளங்களின் கார்ப்பரேட் அறிவிப்பு பிரிவில் இந்த அறிவிப்பை காணலாம்.

ரவி குமார் டிஸ்டிரில்லரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/- R.V. ரவிகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 00336646
இடம் : புதுச்சேரி
தேதி : 05-02-2022

அடகு நகை ஏல அறிவிப்பு

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கஸ்பா கள்ளக்குறிச்சி, நெ:367/107, சேலம் மெயின் ரோட்டிலிருக்கும் B.பிரபாகரன் நகை அடகு கடையில் 01/04/2017 முதல் 31/03/2020 முடிய அடகு வைத்து கெடுவு கடந்து மீட்கப்படாதிருக்கும் பொன், வெள்ளி நகைகளை 16/02/2022 ந் தேதி புதன்கிழமை மாலை 03:00 மணி முதல் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வழங்கிய ஏல அனுமதி உத்தரவின் படி துணை வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி கடையில் என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். ஏலம் போட்ட தொகையில் அடகு வணிகருக்கு சேர வேண்டிய அசல், வட்டி இதர செலவினங்கள் போக மீதி தொகை எதுவும் இருந்தால் அடகு வைத்தவர் மேற்படி வணிகரிடம் பெற்றுக் கொள்ளவும், நோட்டீஸ் கிடைக்காதவர்களுக்கு கடைக்காரர் பொறுப்பல்ல.

D.சஜ்ஜன்மல்,
மாவட்ட ஏலதாரர்,
44/D,செக்கு மேட்டுத்தெரு,
கள்ளக்குறிச்சி.

★★★★★

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கஸ்பா கள்ளக்குறிச்சி, நெ:369/108, சேலம் மெயின் ரோட்டிலிருக்கும் P.தேவராஜ் நகை அடகு கடையில் 01/04/2017 முதல் 31/03/2020 முடிய அடகு வைத்து கெடுவு கடந்து மீட்கப்படாதிருக்கும் பொன், வெள்ளி நகைகளை 16/02/2022 ந் தேதி புதன்கிழமை காலை 10:00 மணி முதல் கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வழங்கிய ஏல அனுமதி உத்தரவின் படி துணை வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி கடையில் என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். ஏலம் போட்ட தொகையில் அடகு வணிகருக்கு சேர வேண்டிய அசல், வட்டி இதர செலவினங்கள் போக மீதி தொகை எதுவும் இருந்தால் அடகு வைத்தவர் மேற்படி வணிகரிடம் பெற்றுக் கொள்ளவும், நோட்டீஸ் கிடைக்காதவர்களுக்கு கடைக்காரர் பொறுப்பல்ல.

D.சஜ்ஜன்மல்,
மாவட்ட ஏலதாரர்,
44/D,செக்கு மேட்டுத்தெரு,
கள்ளக்குறிச்சி

ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்
CIN: L36999TN1961PLC004606
(ஐஎஸ்ஓ 9001:2015 மற்றும் ஐஎஸ்ஓ 14001 : 2015 கம்பெனி)
பதிவு அலுவலகம்: ''எஸ்வின் ஹவுஸ்'', 13, பழைய மகாபலிபுரம் ரோடு, பெருங்குடி, சென்னை–600 096.
தொலைபேசி: 044-24960335. இமெயில்: investor@highenergyltd.com.

31 டிசம்பர், 2021ல் முடிந்த காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

ரூ.லட்சத்தில்

விவரங்கள்	முடிந்த காலாண்டு 31.12.2021 (தணிக்கை யாகாதது)	முடிந்த காலாண்டு 30.09.2021 (தணிக்கை யாகாதது)	முடிந்த காலாண்டு 31.12.2020 (தணிக்கை யாகாதது)	முடிந்த 9 மாதங்கள் 31.12.2021 (தணிக்கை யாகாதது)	முடிந்த 9 மாதங்கள் 31.12.2020 (தணிக்கை யாகாதது)	முடிந்த கூடந்த கணக்காண்டு 31.3.2021 (தணிக்கை யானது)
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1672.59	2652.03	2056.32	5404.64	5468.05	7795.41
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் விலக்கு மற்றும் /அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	437.11	1197.34	505.39	1793.64	1696.96	2398.82
வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும் /அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	437.11	1197.34	505.39	1793.64	1696.96	2398.82
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும் /அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	321.94	881.19	417.71	1319.94	1318.54	1832.93
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	303.61	873.88	425.80	1314.13	1343.36	1817.94
சமபங்கு மூலதனம்	179.28	179.28	179.28	179.28	179.28	179.28
இதர ஈக்விடி (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)கடந்தாண்டு தணிக்கையான நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி						4014.35
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (வருடாந்திரமல்ல) (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) அடிப்படை & டைலூட்டட்						
அடிப்படை	17.96	49.15	23.30	73.62	73.55	102.24
டைலூட்டட்	17.96	49.15	23.30	73.62	73.55	102.24

குறிப்பு:
1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ், ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது. கம்பெனியின் இணையதளம் www.highenergy.co.inல் நிதி பிரிவின் கீழ் அவை உள்ளது.
2. முந்தைய காலகட்டத்திற்கான புள்ளிவிவரங்கள் தேவையான இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன.
3. மேற்கூறிய தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகள் 5 பிப்ரவரி 2021 அன்று நடைபெற்ற அந்தந்த கூட்டங்களில் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் நிதிநிலை முடிவுகளின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
4. லீட் ஆசிட் பேட்டரி பிரிவு செயல்பாடுகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளன.

(குழுவின் ஆணைப்படி)
ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்டுக்காக
G.A. பதஞ்சலி
நிர்வாக இயக்குனர்
இடம் : சென்னை
தேதி : 05.02.2022

எப்சம் புராபர்டீஸ் லிமிடெட்
CIN: L24231TN1987PLC014084
Telephone: 91-4443021233 Email: epsomproperties@gmail.com web:www.epsom.in
பதிவு அலுவலகம்: ரீஜன்சி ஹவுஸ், 2ஏ, 2வது மாடி, 250/7, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை தமிழ்நாடு 600 006 இந்தியா.

டிசம்பர் 31, 2021–ல் முடிந்த மூன்றாவது காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்
(சமபங்கு தரவு நீங்கலாக மற்றவை ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு
	முடிந்த நடப்பு காலாண்டு டிசம்பர் 31, 2021	முடிந்த இதே காலாண்டு டிசம்பர் 31, 2020	மார்ச் 31, 2021 உடன் முடிவடைந்த காலத்திற்கான முதல் தேதி வரை புள்ளிவிவரங்கள்
	தணிக்கை யாகாதது	தணிக்கை யாகாதது	தணிக்கை யானது
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	0.00	0.00	8.56
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	-6.73	-7.03	-21.13
வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	-6.73	-7.03	-21.13
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு பின்)	-6.73	-7.03	-21.13
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது)	-6.73	-7.03	-21.13
சம பங்கு மூலதனம்	745.28	745.28	745.28
ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி	-771.54	-750.41	-771.54
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–)			
1. அடிப்படை	-0.09	-0.09	-0.28
2. டைலூட்டட்	-0.09	-0.09	-0.28

குறிப்புகள்:
1. டிசம்பர் 31, 2021 முடிந்த மூன்றாவது காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனியான தணிக்கை செய்யப்படாத மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 05.02.2022ல் நடந்த கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்ட மற்றும் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பரிந்துரைக்கப்பட்ட பிரிவு 133–ன் கீழ் மற்றும் திருத்தப்பட்ட கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015–ன் கீழ் இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (★இந்த ஏஎஸ்★) கம்பெனியின் தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. செபி (பட்டியல் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, கட்டுப்பாடு 33–ன் கீழ் காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் விவரங்களின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பிஎஸ்இ இணைய தளம் மற்றும் கம்பெனியின் இணையதளம் www.epsom.in–ல் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
எப்சம் புராபர்டீஸ் லிமிடெட்டிற்காக
மல்லோர் ராஜேஷ் குமார்
நிர்வாக இயக்குனர்
DIN:08125774
இடம் : ஐதராபாத்
தேதி : 05.02.2022

இலங்கையால் சிறைபிடிக்கப்பட்ட 21 மீனவர்களின் காவல் நீட்டிப்பு

கொழும்பு, பிப். 7–

இலங்கையால் சிறை பிடிக்கப்பட்ட நாகை, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்களின் காவல் 21 ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எல்லைத் தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக